(4) அமைச்சரின் அறிக்கை

கேரள மாநிலத்திற்கு நெல் கடத்திச் செல்லப்படுவதாகக் கூறப்படும் புகார் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சரவர்கள் சட்டப் பேரவை 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டப்பேரவை 82(1) விதியின் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறேன்.

மாநில எல்லையைக் கடந்து கேரள மாநிலத்திற்கு நெல் அனுப்பப்படுவதாக அடிக்கடி புகார்கள் வந்துள்ளன. இவ்வாறு கள்ளத்தனமாக அனுப்பப்படுவதை சோதனையிட வசதி அளிக்கும் பொருட்டு மாநில எல்லைநெடுக 15 மைல் அகலமுள்ள பகுதி 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதி முறைப்படுத்துதல்) ஆணையின் கீழ் எல்லையோரப்பகுதியாக அறிவிக்கப்பட்டது. இப் பகுதிக்கு வெளியே வேறு ஒரு இடத்திலிருந்து இப்பகுதிக்குள் நெல் அனுப்புவதற்கும் எல்லையோரப்பகுதிக்குள் நெல் அனுப்புவதற்கும் அனுமதிச் சீட்டு வேண்டும்.

எனினும் மாநில எல்லை நெடுக 15 மைலுள்ள பகுதியில் பெரும் மக்கள் தொகை கொண்ட பெரிய நகரங்கள் உள்ளன என்று தெரிய வந்துள்ளது. இங்கு மக்களுக்கு உள்ளூர் உற்பத்திக்கு மேல் எந்த அளவுக்கு உணவு தானியங்கள் தேவைப்படுகின்றனவோ, அந்த அளவுக்கு நெல், அரிசி முதலியவற்றை அப்பகுதிக்குள் அனுப்புவதற்கு அனுமதிக்க வேண்டியிருந்தது.

இவ்வாறு உள்ளூர் உற்பத்தியோடு பெருமளவு நெல் அரிசி எல்லையோரப்பகுதிக்குள் அனுப்பப்பட்டதால் மாநில எல்லையைக் கடந்து கள்ளத்தனமாக நெல் கடத்திச்செல்வதற்கு போதிய அளவில் நெல் கிடைக்க வழி கோலியது. எனவே எல்லை ஓரப்பகுதியின் அகலத்தை 5 மைலாக குறைக்கவும் இப்பகுதியில் முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறையை கொண்டு வரவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த முறை செயற்படுத்தப்படுவதனால் இப்பகுதிகளுக்குள் கொண்டு செல்லப்படும் நெல், அரிசி அப்பகுதிகளுக்குள்ளேயே பங்கிட்டுக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு பங்கிட்டு வழங்கு

வதற்காக கொடுக்கப்படும் அட்டையில் குறிப்பிட்டிருக்கும் அளவினையொட்டி இப்பகுதிக்குள் அனுப்பப்படும் நெல், அரிசியின் அளவும் முறைப்படுத்தப்படும். இதனால் கள்ளத்தனமாக அரிசி, நெல் கடத்திச் செல்வதற்கான வாய்ப்புகள் கணிசமான அளவுக்கு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அறிவிக்கப்பட்ட எல்லையோரப்பகுதியைத் தவிர மாநில எல்லைகளை அடுத்துள்ள பெரிய பகுதிகள் சிலவற்றில் உள்ளூர் உற்பத்தி காரணமாகவோ அங்கு நடைபெறும் வணிக முறை காரணமாகவோ நெல், அரிசி உபரியாக உள்ளதால் அங்கு, நெல், அரிசி போக்குவரத்தின் மீது கட்டுப்பாடு விதித்திருப்பது நல்லது எனக் கருதப்படுகிறது. எனவே, கன்னியாகுமரி, கோயம்புத்தூர் மாவட்டங்கள், மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம், பெரியகுளம் வட்டங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை, தென்காசி வட்டங்கள், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டம் ஆகியவற்றை தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நெல், அரிசி (போக்குவரத்து கட்டுப்பாடு) ஆணையின் கீழ் அறிவிக்க அரசு திட்டமிட்டுள்ளது. அவ்வாறு அறிவிக்கப்படுவதன் மேல் இப்பகுதிகளிலிருந்து நெல், அரிசி எதும் கொண்டு செல்ல அனுமதி தேவைப்படும். இதனால் எல்லையோரப் பகுதிக்கு நெல், அரிசி, அனுப்பப்படுவதை உன்னிப்பாக கவனிக்க இயலும்.

எல்லையோரப்பகுதிகளில் முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறைக்கான தேவைகளை நிறைவு செய்வதற்காக போதிய உள்ளூர் உற்பத்தி இருக்கும் கன்னியாகுமரி மாவட்டம், மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம், பெரியகுளம் வட்டங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை, தென்காசி வட்டங்கள் ஆகிய பகுதிகளில் வாங்கப்படும் நெல், அரிசி அளவில் 15 சதவீத விதிப்புக்கொள்முதல் முறை செயல்படுத்தப்படும். இவ்வாறு விதிப்புக் கொள்முதல் மூலம் கிடைக்கும் நெல், அரிசி அந்தந்த வட்டங்கள் அல்லது மாவட்டங்களின் எல்லையோரப்பகுதிகளில் வழங்குவதற்காக பயன்படுத்தப்படும். இதனால் சம்பந்தப்பட்ட பகுதிகளில் கிடைக்கக்கூடிய நெல், அரிசியின் அளவு குறையாது.

ஏனெனில் கொள்முதல் செய்யப்பட்ட இருப்புகள் அடுத்துள்ள எல்லையோரப்பகுதிகளிலேயே வழங்கப்படுகின்றன. மற்றும் இப்புதிய ஏற்பாடு செயலில் இல்லாத காலத்திலும் அங்கு உற்பத்தி

யாகும் நெல், அரிசியைக் கொண்டே அப்பகுதிகளின் தேவை முக்கியமாக சரிக்கட்டப்பட்டு வந்துள்ளது. எல்லையைக் கடந்து களளத்தனமாக நெல், அரிசி அனுப்பப்படுவதனுல் எல்லையோரப் பகுதிகளில் நெல், அரிசி விலைகள் உயர்வதற்கு வழிகோலுவதோடு மாநிலத்தின் எஞ்சிய பகுதிகளிலும் கூட அவை உயர்வதற்கு வழிகோலும். ஆகவே, கள்ளத்தனமாக நெல், அரிசி இவற்றை கள்ளத்தனமாய் கடத்துவதைத் தடை செய்ய பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று அரசு இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(5) 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—(தொடர்ச்சி).

* திரு. என். டென்னிஸ் : துணைத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது ஒரு சர்ப்ளஸ் பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. சர்ப்ளஸ் பட்ஜட்டெல்லாம் சிறந்த பட்ஜட் எனவும், டெபிசிட் பட்ஜட்டுகள் மோசமான பட்ஜட் என்றும் சொல்வதற்கில்லை. ஒரு பட்ஜட் சர்ப்ளஸ் பட்ஜட்டா அல்லது டெபிசிட் பட்ஜட்டா என்பதிலிருந்து அதன் தரத்தை நிர்ணயிக்கமுடியாது. ஒரு பட்ஜட்டில் ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற, பொதுமக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்த்துவைக்க என்னென்ன, என்னென்ன கொள்கைகள், திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதிலிருந்துதான் ஒரு பட்ஜெட்டின் தரத்தை நிர்ணயிக்க முடியும். பழைய நிதிநிலை அறிக்கைகளைப் பார்த்தால் ஏழை மக்களின் நல்வாழ்விற்காக நல்ல பல திட்டங்கள் இடம்பெற்றிருக்கும். வயோதிகர்களுக்குப் பென்ஷன், ஏழைகளுக்கு இலவச மதிய உணவு, இலவசக் கல்வி போன்ற திட்டம் அந்த பட்ஜெட்டுக்களில் இடம் பெற்றிருக்கும். ஆனல் இந்த நிதிநிலை அறிக்கையில் பார்க்கும் போது, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடும் வழிவகைகளை காணவில்லை.